பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 05 வியாழக்கிழமை 21.07.2022 கதிர் 258

இனி இது ரகசியம் அல்ல!

பத்திரிகையாளனாக இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நான் மிக நெருங்கிப் பேசிப் பழகிய ரணில் அல்லர் இன்று ஜனாதிபதியாகி இருக்கின்றவர். பிரதமராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் இருந்த சந்தர்ப்பங்களில் நான் மிகவும் 2

## ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் இந்தியா தலையிடவில்லை என விளக்கம்

### தூதரகம் நேற்று அறிக்கை

'சுமந்திரனின் நடவடிக்கையால் பெரும் இராஜதந்திர நெருக்கடி; இந்தியத் தரப்பு மீது ரணில் கடும் சீற்றம்; புதுடில்லியிடம் ஆட்சேபிக்கவும் திட்டம்' – என்ற தலைப்பில் நேற்று முதலாம் பக்கத்தில் பிரசுரமான தலைப்புச் செய்தி தொடர்பில் இந்தியத் தூதரகம் நேற்று மறுப்புச் செய்தி ஒன்று அனுப்பி வைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

1.இலங்கை ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாக்களிப்பு தொடர்பாக இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்குடன் இந்தியாவிலிருந்து 2

## யாழில் எரிபொருள் விநியோகம் புதிய முறைமை குறித்து அறிவிப்பு

தேசிய எரிபொருள் விநியோகத் திட்டத்திற்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று முதல் குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகம் பின்வரும் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ் மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது:-

**1.பெற்றோல் விநியோகம்**


மோட்டார் சைக்கிள் – ரூபா 1500.

முச்சக்கர வண்டி – ரூபா 2000.

கார் / வான் மற்றும் இதர வாகனங்கள் – ரூபா 7000.

பெற்றோல் 2

# சகலரும் ஒன்றித்து செயற்பட ஜனாதிபதி ரணில் அழைப்பு!



### வெற்றியின் பின்னர் பகிரங்கமாக விடுத்தார்

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் நிலைவரத்தைப் புரிந்துக் கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முன்வரவேண்டும் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதியாக நேற்றுத் தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து, நாடாளுமன்றில் அவர் ஆற்றிய விசேட உரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். 2

## முழு நாடாளுமன்றத்தையுமே அரசாகக் கொண்டுசெல்வோம்

### அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு



முழு நாடாளுமன்றத்தையும் அரசாங்கமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதற்காக பிரதான எதிர்க்கட்சிக்கு 06

## வங்கிக் கடனாளிகளுக்கு 6 மாத சலுகை நிவாரணம்

நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட கடன் வாடிக்கையாளர்களுக்கு ஆறு மாதங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குமாறு உரிமம் பெற்ற வங்கிகளிடம் இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, 2

## நாணய நிதியப் பேச்சுகள் நிறைவடையும் கட்டத்தில்!



இலங்கையை நெருக்கடியிலிருந்து மீட்கும் நிவாரணத் திட்டம் தொடர்பில் இலங்கையுடனான பேச்சுகளை விரைவில் நிறைவு செய்ய முடியும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் தாங்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர் அதன் முகாமைத்துவ 06

## புலிகளின் முன்னாள் தளபதி ராம் நேற்று விடுதலையானார்

விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ராம் நேற்று நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்டிருந்த ராம் மீண்டும் 2015 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை 6 வருட தண்டனை நிறைவு பெற்ற நிலையில் மட்டக்களப்பு நீதிமன்றில் விடுதலை செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதையடுத்து இராணுவ புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பின் கீழ் அவர் அம்பாறை தம்பிலுவில் பிரதேசத்தில் குடியேறி வாழ்வாதாரமாக 2

## இனிமேல் பாடசாலைகள் வாரத்தில் மூன்று நாள்கள்

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய மூன்று நாள்களில் மாத்திரம் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை வழமையான நேரங்களில் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் பாடசாலைகள் நடைபெறாத புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இணைய வழிக் கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படும் எனவும் 8



## சேலைன் ஏற்றியபடி வந்து நேற்று வாக்களித்த எம்.பி.

நாடாளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில், சேலைன் ஏற்றியபடி நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொண்டார்.

அவருடைய பெயர், அட்டவணையில் 223 ஆவதாக இருந்த போதும், இடைநடுவில், அவருக்கு 2

## டலஸைக் களமிறக்கியவர்கள் தாங்களே என்கிறார் மஹிந்தர்



நாம் டலஸை போட்டியிடச் செய்தோம். நாமும் வாக்களித்தோம். ஆனால் அவர் தோல்வியடைந்து விட்டார் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதிக வாக்குகள் கிடைத்தமையால் ரணில் விக்கிரமசிங்க வெற்றிப் பெற்றார். எதிர்காலத்தில் 8

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருக்கமாக அவருடன் பழகும் சந்தர்ப்பம் இருந்திருக்கின்றது. ஆனால் நேற்று முன்தினம் இரவு அவருடன் ஒரு செய்திக்காக நீண்ட கால இடைவெளியின் பின்னர் பேசினேன். அதே நெருக்கத்தையும் பரிச்சியத்தையும் அவர் பிரதிபலிக்கத் தவறவில்லை. ஆனால் அவரின் குரலிலும்சொல்லாடலிலும்,அணுகுமுறைத் தொனியிலும் ஒரு கம்பீரத்தை உணர்ந்தேன். எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக இருந்த ரணில் வேறு. இப்போது ஜனாதிபதி ரணில் வேறு.

வழக்கமாக ஒரு நிகழ்ச்சிக்கு வந்தால் நேரடியாக அதை முடித்துக் கொண்டு வாகனத்தில் புறப்பட்டு விடுவார். இடையில் தரித்து அரசியல்வாதிகளுக்குரிய பந்தாக்கள், போக்குகள் காட்ட மாட்டார். ஆனால் நேற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் இருந்து புறப்பட்ட அவர் நாடாளுமன்றத்தின் முன்புறம் தமது வாகனம் வந்தபோது திடீரென யாரும் எதிர்பாராத விதத்தில் வாகனத்தை நிறுத்தச் சொன்னார். நாடாளுமன்றப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த முப்படையினர் மற்றும் பொலிஸாரை நடந்து தாமே தேடிச் சென்று சந்தித்தார். மூன்று நாள்களாக சோர்வின்றி நாடாளுமன்றத்திற்கு உச்சப் பாதுகாப்பு தந்த முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் நன்றி தெரிவித்தார். அவர்களின் பணியை மெச்சினார். இதன் மூலம் மிக இலகுவாக முப்படையினரினதும் பொலிஸாரினதும் நெருக்கத்தை விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அரசியல்வாதிக்குரிய தந்திரம் மூலம் அவர் சுவீரித்துக் கொண்டார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவி என்ற அரசியல்வாதிக்குரிய பண்பு நிலையை – தகைமையை எட்டிவிட்டார் என்பதற்கு இது நல்லதோர் உதாரணம்.

★ ★ ★

டலஸ் – சஜித் அணிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்த கட்சிகள், அணிகளில் இருந்த எம்.பிக்களின் எண்ணிக்கை 113 க்கும் அதிகம். ஆனால் 82 வாக்குகளே டலஸுக்குக் கிடைத்துள்ளன. இடையில் என்ன நடந்தது? எல்லாவற்றிற்கும் காரணம் காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள்தான். பல குழுக்கள், இ.தொ. காவை போல ரணிலுக்கு ஆதரவு என்று பகிரங்கமாக அறிவிக்கவே விரும்பின. ஆனால் காலிமுகத் திடல் போராளிகளை நினைக்க வயிற்றைக் கலக்கியதால் அவை ஒரு தந்திரம் செய்தன. ரணிலைத் தொடர்பு கொண்டு, 'நிச்சயமாக உங்களுக்குதான் வாக்களிப்போம், அதை நம்புங்கள், ஆனால் வெளியில் சஜித் பக்கம் ஆதரவு என்று அறிவிப்போம், அதையும் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்றனவாம்.

ரணிலுக்குத் தேவை எம்.பிக்களின் வாக்குகளை தவிர, அறிவிப்புகள் அல்ல, ஆகவே அவரும் 'நல்லது. அப்படியே செய்யுங்கள்!' – என்று தலையாட்டி விட்டு திடமாக இருந்து விட்டார். தமது வெற்றி உறுதி என்று ரணில் நம்பி இருந்தமைக்கு இப்படிக் கிடைத்த செய்திகள் தான் காரணம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

★ ★ ★

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. இனி அடுத்த சுற்றுப் போட்டி அமைச்சர்கள் தெரிவு. அதன் பின் அமைச்சுகளின் செயலாளர்கள் நியமனம், தொடர்ந்து மாகாண ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் பதவி என்று பல திருக்கூத்துகள் உள்ளன. ஊடகங்களுக்குச் செய்தி சுவாரசியத்திற்குப் பஞ்சம் இருக்கப் போவதில்லை.

★ ★ ★

சில விடயங்கள் 'எப்பவோ முடிந்த காரியம்' என்பார்கள் – யோக சுவாமியின் மகா வாக்கியபடி.

சில விவகாரங்களுக்கு மறுப்புகள் வரும், ஊடகங்கள் மீது காய்வார்கள் என்று நேற்றே தெரிவித்திருந்தேன். 'எப்பவோ முடிந்த காரியம்' மாதிரி அப்படித் தான் நடக்கும். பார்த்து இருப்பதை தவிர தமிழருக்கு வேறு வழியில்லை. ஆனால் நம் வாசகர்களான ரசிகர்களுக்கு எல்லா உண்மைகளும் தெரியும். அவர்கள் எல்லாம் அறிந்தவர்கள்.

– மின்னல் –

## சகலரும் ஒன்றித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாடு இன்றுள்ள நிலைமை தொடர்பாக நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

எனவே, என்னுடன் இணைந்து போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நான் இணைந்து பணியாற்ற வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

நாம் பிரிந்து செயற்பட்ட காலம் இத்தோடு முடிவுற்றுவிட்டது. நாம் இனிமேல் ஒன்றாக பயணிக்க வேண்டும்.

நாளை (இன்று)முதல் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளோம். – என்றார்.

---

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் ரீதியான அழுத்தம் வழங்கப்பட்டதாக ஆதாரமற்றதும் ஊகங்களின் அடிப்படையிலும் வெளியாகியிருக்கும் ஊடக அறிக்கைகள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம்.

2.இந்த ஊடக அறிக்கைகள் முழுக்க முழுக்க பொய்யானதென நாம் திட்டவட்டமாக மறுக்கின்றோம். சிலரது கற்பனையின் தோற்றப்பாடாகவே இவ்வாறான அறிக்கைகள் அமைகின்றன.

3.ஜனநாயக வழிமுறைகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசமைப்பு விதிகள் ஆகியவற்றுக்கு அமைவாக தமது அபிலாஷைகளை நனவாக்க விரும்பும் இலங்கை மக்களுக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்கள் மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை என்றும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

– என்று அந்த மறுப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேசமயம், அந்தச் செய்தி பொய்யானது எனத் தெரிவிக்கும் டிவீட் குறிப்பு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் நேற்றுக் காலை வெளியிட்டிருந்தார்.

---

## யாழில் எரிபொருள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விநியோகத்தின் போது வாகன பதிவு இலக்கத்தின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் கீழ்வருமாறு விநியோகம் மேற்கொள்ளப்படும்.

செவ்வாய் , சனி – 0,1,2
வியாழன்,ஞாயிறு – 3,4,5
திங்கள் புதன் வெள்ளி – 6,7,8,9

இதற்கு மேலதிகமாக QR code முழுமையாக அமுல்படுத்தப்படும் வரையில் எரிபொருள் விநியோக அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும். எரிபொருள் விநியோக அட்டையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையத்திற்கு மேலதிகமாக ஏதேனும் ஒரு எரிபொருள் நிலையத்தில் அவ் அட்டையைப் பயன்படுத்தி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

**2. டீசல் விநியோகம்**

டீசல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரதேச செயலாளரின் மேற்பார்வையில் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையம் அத்தியாவசிய தேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் இது தவிர்ந்த ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றறார்கள்.

மேலும் தனியார் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்கும், பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கும் மறு அறிவித்தல் வரை இலங்கை போக்குவரத்து சபை சாலைகள் ஊடாக தொடர்ந்து வழமைபோன்று டீசல் விநியோகம் மேற்கொள்ளப்படும் .

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் விநியோக திகதிகள் பற்றிய விவரங்கள் ஊடகங்களில் அவ்வப்போது வெளியிடப்படும்.

எனவே பொதுமக்கள் வரிசையில் காத்திராது ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி எரிபொருளை பெற்றுக் கொள்ளும்படியும், விநியோக நடவடிக்கைகள் தொடர்பாக மேலான ஒத்துழைப்பு வழங்கி எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

## சேலைன் ஏற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு ஆட்சேபனை உள்ளதா என தெரிவத்தாட்சி அதிகாரியான நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சபையில் கேட்டார்.

எனினும் எதிர்ப்புகள் எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில், சேலைன் போத்தலை, உதவியாளர் ஒருவர் ஏந்தி பிடித்துக் கொள்ள அவர், வாக்களித்துவிட்டு சபையை விட்டு வெளியேறி சென்றார்.

அதேவேளை, சுகயீனம் காரணமாக, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க தனது பெயர் அழைக்கும் வரையிலும் காத்திருக்காமல் முன்கூட்டியே வாக்களித்து விட்டு சபையை விட்டு வெளியேறினார்.

## புலிகளின் முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவசாயம் மேற்கொண்டுவந்தார்.

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் பெற்று ரணில் அரசாங்கம் ஆட்சியேறியதும் சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலை குண்டு அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் தளபதி ராமை தம்பிலுவில் வைத்து பயங்ரவாத தடுப்பு பிரிவினர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணையின் பின்னர் அவருக்கு எதிராக வழக்கு தொடந்து அவர் தொடர்ந்து வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

பின்னர் அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட 6 வருட தண்டனைக் காலம் முடிவுற்று நேற்று புதன் கிழமை அவர் மட்டக்களப்பு நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

---

## வங்கிக் கடனாளிகளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தந்த நபர்களின் எதிர்கால கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் வணிகம்/திட்டங்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

தற்போதுள்ள பெரும் பொருளாதார சவால்கள் மற்றும் மேலதிக நிவாரணம் வழங்குமாறு அரச நிறுவனங்கள் உட்பட பல தரப்பினர்களின் கோரிக்கைகள், அதாவது சுற்றுலாத் துறை மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அமைச்சரவை தீர்மானங்களை கருத்தில் கொண்டு மத்திய வங்கி இந்த முடிவை எடுத்துள்ளது.




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா பரீட்சைகள் (பழையபாடத்திட்டம்)

(முழு நேரம் , பகுதி நேரம்)

மேற்படி டிப்ளோமா பாடநெறியின் (முழு நேரம் , பகுதி நேரம்) முதலாம் வருட முதலாம், இரண்டாம் அரையாண்டு, இரண்டாம் வருட முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் யாவும்; பழைய பாடத்திட்டத்தின் கீழ் மீள் பரீட்சைகள் ஒரு தடவை மட்டும் நடைபெறவுள்ளதால் சித்திபெறத்தவறிய மீள் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட கல்வியியல் துறையில் விண்ணப்பப்படிவங்களைக் பெற்று பூர்த்தி செய்து 29.07.2022 இற்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பப்படிவங்கள் கலைப்பீட இணையத்தளத்திலும் (www.arts.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்வியியல் துறைத்தலைவருக்கு பதிவுத்தபாலில் குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சகலரையும் அவரணையுங்கள்!

ஜனாதிபதித் தேர்தல் திருவிழா முடிவுற்று விட்டது. அதையொட்டிய மகிழ்வுகள், கசப்புணர்வுகள், திருப்திகள், அதிருப்திகளை மறந்து, ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, நாட்டின் அடுத்தக் கட்ட அரசியல் செல்நெறி குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டிய வேளை வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் உச்சத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்து, வழமையான நிலைமையை ஏற்படுத்துவதற்கு உரிய வழிமுறைகளை அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு முன்னெடுக்க வேண்டிய தருணம் இது.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கும் தேசிய அரசு ஒன்றை அமைத்து, அதன் மூலம் நாட்டின் நெருக்கடியை எதிர்கொண்டு மீளும் திட்டத்தைத் தமது மனதில் கொண்டுள்ளார். நேற்று வரை பதில் ஜனாதிபதியாக இருந்த அவர், நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முன்னரே தமது தேசிய அரசுத் திட்டம் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார்.

இன்று புதிய ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் அவர் பதவியேற்றுக் கொள்ளும் போது தற்போதைய அமைச்சரவை செயலிழக்கும். புதிய பிரதமரையும், அமைச்சர்களையும் அவர் பெயரிட்டு நியமிக்க வேண்டிய தேவை நேரும்.

இது குறித்துப் பேசுவதற்காக கட்சித் தலைவர்களை இன்று அவர் அழைத்திருக்கின்றார்.

முக்கியமாக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. போன்றவை யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்து கொண்டு, இந்த அழைப்பை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டியது அவற்றின் கடமையாகின்றது.

ஜனாதிபத் தேர்தலில் அவரை எதிர்த்து நின்ற டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸநாயக்கா மற்றும் சஜித் பிரேமதாஸ, சுமந்திரன் போன்றோர் தேர்தலை ஒட்டிக் கட்டவிழ்ந்த விடயங்களைத் தள்ளி வைத்து விட்டு, தேசிய அரசு தொடர்பான கலந்துரையாடல்களில் திறந்த மனதுடன் பங்குபற்றுவதே பொருத்தமானது.

19ஆவது திருத்தத்தை விரைந்து மீளக் கொண்டு வந்து, நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் கணிசமான அதிகாரங்களை நாடாளுமன்றத்திடம் மீளவும் ஒப்படைக்கும் பணியை முன்னெடுக்க வேண்டிய அவசரமும், விருப்பமும் புதிய ஜனாதிபதிக்கு உள்ளன. 2015 இல் பிரதமராக இருந்து அந்த 19ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தவர் ரணில் விக்கிரமசிங்கதான். அப்போது அதை அவர் செய்றவதற்கு இரு ஜனாதிபதி சட்டத்தரணிகள் அவருக்குப் பக்கபலமாக இருந்தனர். ஒருவர் எம்.ஏ.சுமந்திரன். மற்றவர் ஜயம்பதி விக்கிரமரட்ண.

இவர்களில் சுமந்திரனே இப்போதும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார். உத்தேச சட்ட விவகாரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுப்பதற்கு நிச்சயம் சுமந்திரனின் சட்டமூளை அவருக்கு அவசியம். சுமந்திரனை அரவணைத்துக் கொள்வதன் மூலம் தனது அரசியல் முதிர்ச்சியையும் தாராளப் போக்கையும் மூத்த அரசியல்வாதியான ரணில் வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கிறோம். எதிர்க்கட்சியில் இருந்து போது சுமந்திரனை 'எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்' என்று விளித்தவர் ரணில். அந்த 'சட்டமா அதிபர்' மூளை நெருக்கடிகளில் இருந்து ரணிலின் ஆட்சித் தலைமை மீண்டெழுவதற்கு உதவ வேண்டும். அதற்கு சுமந்திரனும் சேர்ந்து முன்வரவேண்டும்.

தேசியப் புரிந்துணர்வாக இந்த இணக்கம் அவசியம்.

# கோட்டாபய நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டமைக்கான காரணம்

## கூறுகிறார் அமெரிக்காவின் முக்கிய இராஜதந்திரி

இலங்கையில் ஊழல்மோசடிகளாலும், பணவீக்க அதிகரிப்பினாலும் தூண்டப்பட்ட அமைதியின்மையின் விளைவாக கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறுவதுடன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் எனச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாக அதிகாரி சமந்தா பவர், ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெறும் இறுதி நாடாக இலங்கை இருக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் உணவுப்பாதுகாப்பு மற்றும் போசணை மட்டம் ஆகியவற்றின் நிலை எவ்வாறானதாக உள்ளது என்பது தொடர்பாகத் தெளிவுபடுத்துகையிலேயே சமந்தா பவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெறும் இறுதி நாடாக இலங்கை இருக்காது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஊழல்மோசடிகளாலும், பணவீக்க அதிகரிப்பினாலும் தூண்டப்பட்ட அமைதியின்மையின் விளைவாக அந்நாட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதுடன் அப்பதவியிலிருந்து விலகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்று சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 'வரலாற்று வழிகாட்டலின் அடிப்படையில் நோக்குகையில் இறுதியாகக் கவிழும் அரசாங்கம் இதுவல்ல என்பதை நாமறிவோம்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உலகளாவிய ரீதியிலுள்ள மிகவும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் பசியினாலும், மந்தபோசணையாலும் வெகுவாகப் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் பகிர்ந்துகொண்ட சமந்தா பவர், பசிக்கும் மந்தபோசணைக்கும் எதிராகப் போராடுவதற்கு அரச மற்றும் தனியார் துறையினர் ஒன்றிணையவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

# இலங்கைக்கும் சர்வதேச நாணயநிதியத்துக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்ட பின்னரே உதவிகள் குறித்து ஆராய்வு!

## என்கிறார் ஜெய்சங்கர்



இலங்கை நிலைவரம் தொடர்பாக இயல்பாகவே கவலையடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இந்தியா, நிதியை விவேகமாக கையாள்வது பொறுப்புணர்வுள்ள அரசாங்கம் இலவசங்களை வழங்காமலிருப்பது போன்ற பாடங்களை இலங்கை நிலைவரத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.


தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் காங்கிரஸ் உட்பட 28 கட்சிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் இலங்கை போன்ற நிலைவரம் இந்தியாவிலும் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுவதை வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நிராகரித்துள்ளார்.

பந்து தற்போது இலங்கையிடமே உள்ளது. அவர்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதன் பின்னர் எவ்வாறான ஆதரவை வழங்கலாம் என நாங்கள் ஆராய்வோம் என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இன்னமும் பலவீனமான நிலையிலேயே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போன்ற நிலைமை இந்தியாவில் ஏற்படலாம் என நாங்கள் கருதவில்லை. ஆனால், நாங்கள் செய்கின்ற விடயங்களில் அர்த்தமுள்ளது நிதியை விவேகமாக கையாள்வதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம். ஓரிரு மாநிலங்களில் மாத்திரம் நாங்கள் இதனைச் சுட்டிக்காட்டவில்லை அனைத்து மாநிலங்களிலும் இதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி தனியார் காணியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகாம்பிகைக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணி உரிமையாளர் துப்புரவு பணியில் ஈடுபட்ட நிலையில் வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்குத் தெரிவித்தபோது அதிரடிப்படையினரால் இவை செவ்வாய்க்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளன.

இதில் மோட்டர் ஷெல்கள், மகசின்கள், கண்ணீர் புகைக்குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன எனவும், அவற்றைப்பாதுகாப்பாக செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. ஆரையம்பதியில் தங்கம் தேடி நிலத்தை தோண்டிய 4 பேர் கைது!

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி ஒல்லிக்குளம் பிரதேசத்தில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் தங்கம் தேடி நிலத்தை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 4 பேரை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான செவ்வாய் நள்ளிரவு 11.30 மணியளவில் இந்தப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை தங்கு விடுதிக்கு அருகிலுள்ள கைவிடப்பட்ட காணி ஒன்றினை களவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு நிலத்தில் தங்கம் இருப்பதாக நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 4 பேரை கைது செய்தமையுடன் நிலத்தை தோண்ட பயன்படுத்திய மண்வெட்டி, அலவாங்கு, சவல் போன்ற ஆயுதங்களை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-68

**செய்கைகள் தரும் பதிவுகள்**

ரணிலா? டலஸா? இந்த ஆக்கம் பதிவுக்கு வரும்போது அதற்கு விடை தெரிந்திருக்கும். அந்த விடையிலிருந்துதான் நாடும் தமிழ் மக்களும் கூட முன்னேற வேண்டும். எந்தத் திசை, எடுக்கப்பட்ட முடிவுகளால் நிர்ப்பந்தமாகும் என்று அவர்களுக்குப் புரிகிறதோ என்னவோ மக்கள் தங்களது மனக்கணக்குகளை ஏற்படுத்தி கொள்வார்கள்.

ஆனால் முடிவுகளை எடுப்பதற்குக் கூட்டமைப்பில் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவங்கள், பேச்சாடல்கள் எனது அனுபவத்தில் தேவையற்றவை. தங்களது சக நாடாளுமன்றக் குழு உறுப்பினர் ஒருவர் சொல்வதை மற்றவர்கள் நம்புவதற்கு தயக்கம் இருந்தால், உறவுகளில் இனத்தின் நலம் தாண்டி, தனிப்பட்ட விரிசல்கள் யாருக்கோ செயல்படுவதில் உண்டு என்று தான் உலகம் விளங்கிக் கொள்ளும். சில முக்கிய தகவல்கள் காதோடும் காதோடும் பேசுவையாக இருக்க வேண்டும். இடையில் ஒலிபெருக்கிகள் அதற்காக வந்து விட்டால் கேட்பார் வியாக்கியானங்கள் பல வந்து சேரும். தற்சமயம் வந்தவற்றில் நடந்தவற்றை மறுத்து, சுமந்திரன் செய்தி வெளியிட்டு, அது பிழையான தகவல் என்றும், சகோதர நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் எடுக்க திராணியற்றவர்கள் ஆக இருந்தால் அதனைத் தன் முதுகில் தானே சுமக்கத் தயாராக இருக்கிறார் என்கிறார்.

தீர்மானங்கள் திணிப்பவையாக இருக்கக் கூடாது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னான போர் ஒவ்வொன்றுமே இப்படியாக நடந்தவைதான். ஆனால் தாழ்ந்து விட்டாலும், வாழ்ந்து விட்டாலும் உலகம் ஏசவோ பேசவோதான் போகும். அதற்கு, இடைப்பட்டோரையும் ஊடகங்களையும் பிழையாக செய்தி தந்தன என்பதும் அல்லது திரிரித்தர்கள் என்பதும் வழமை.

ஜப்பானிய தூதுவர் சொன்னார் என கூட்டமைப்பினரைக் குறித்து ஊடகங்களில் வந்த சர்ச்சைகளால் இவர்கள் நம்பகமற்றவர்கள் என்ற அபிப்பிராயத்தை ராஜதந்திர வட்டாரங்களில் ஏற்கனவே கூட்டமைப்பினர் ஏற்படுத்தினார்கள். அதை தொடர்ந்து எல்லாராலுமே அது திருப்பி செய்யப்படுகிறது – ஊடகங்களில் பாரத்தையும் குற்றச்சாட்டையும் போட்டு.

**காலி முகத்திடல் போராளிகளின் தெளிவும் குழப்பமும்**



இதனை எழுதும் போது ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் தெரியவரவில்லை. யார், யார் கடைசியில் போட்டியிடப் போகிறார்கள் என்பதும் நிச்சயம் இல்லை. எனினும் இந்தப் பத்தி பதிவுக்கு வரும் போது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வந்துவிடும். அதில் தமது ஆதரவுத் தரப்புக்குத் தமிழ் தரப்புகளின் ஏதோ ஒரு வித ஒருமைப்பாட்டில் வைத்த நிபந்தனைகளும் தெரிந்து விடும்.

இராமன், பரதன் அன்றில் அனுமான் ஆண்டால் என்ன, ஆட்சிக்குத் தேர்தல் என்ற சிக்கெடுப்பைக் கடந்த பின், பேரினவாதம் இனப்பிரச்சினையை கிள்ளுக்கீரையாக, ஏதோ ஒரு சில காலங்களில் பெரிதாக சடைத்து வளர்ந்து, சில நாள்களில் முடிந்து விடும், அந்த நேரத்துக்கு ஏதோ சொல்லி சமாளித்து விட்டால் சரி என்ற போக்குகளைத் தொடரும்.

தமிழ் மக்கள் தங்களுக்கான தீர்வுகளை பேசாமல் –

அதற்கான போராட்டங்களை நடத்தி விடயத்தைக் கொதிநிலையில் வைத்திருக்காமல் – தன்னிறைவு காணும் திட்டங்களைக் கருக்கட்டி, செயல்படுத்தாமல் –

பேரினவாதம் அவற்றை எங்களுக்கு சமபந்தி போசனம் தந்து நாட்டு நிர்வாகங்களில் ஈடுபடுத்துவார்கள் என்பதைக் கனவாக – சினிமா மாதிரி – கண்டு ரசிக்கலாமேயே ஒழிய அது யதார்த்தமாகாது.

அதனைத் தனது அனுபவங்களின் ஊடாக விடுதலை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கூட சொல்லி வைத்தார். அவருக்கு முன்பிருந்த வர்கள், பின் வந்தவர்கள் யாவரினதும் அனுபவங்களும் அவைதான்.

சிறுபான்மையினருக்காக தார்மீகங்கள் பேசப்பட்ட காலி முகத்திடல் போராளிகளுக்குக் கூட தனியாக ஒரு தலைமை ஒன்றில்லை. 1976 இல் தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் கிளம்பிய பல விடுதலைக் குழுக்கள் போல இவர்களும் பரந்து பட்டு தனிப்பட்ட கொள்கைகளையும் மாற்றங்களையும் கூறுகிறார்கள். ஆயினும் அந்தந்த கோரிக்கைகளில் பேரினவாதத்தின் அதிகாரங்களை சிறுபான்மையுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தும் எண்ணங்கள் தென்படவில்லை. ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் அவ்வையார் சொன்னவையே தார்மீகங்களாகப் பேசப்பட்டன போல் எங்களது அனுபவத்திற்குத் தெரிகிறது.

ஜே.வி.பியில் இருந்து கிளையாகி இப்பொழுது அரசியல் உருவமாக இருக்கும் சோசலிஸ்ட் முன்னணிதான் தேர்தலில் பின் மக்கள் சபைகள் அமைய வேண்டும், அந்த மக்கள் சபையின் விருப்பப்படி பிரதேசங்களில், மாகாணங்களில் அதிகாரங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தினை வைக்கிறது.

இது முன்னேற்றமானாலும், எந்த அளவில் பேரினவாதம் கொண்ட மக்களின் புரட்சிகளாலன்றி தேர்தலால் இது முடியும் என்பது கேள்விக்குறியே.

கிளர்ச்சிக்காகப் பொதுமக்களின் பல மட்டங்களிலிருந்து வந்து சேர்ந்தவர்களிடையே, தற்சமயம் வன்முறைவாதிகளும், அரசியலில் மக்களது ஆதரவைப் பெருமளவில் பெற முடியாதவர்களும், போராட்டத்தில் உள்புகுந்து அதனைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் மேலோங்க, அது பல பகுதிகளிலும் இருந்து கருத்தூக்கம் பெறுகிறது.

அவர்கள் பலமான இடதுசாரிக் கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் சோசிலிஸ்ட் முன்னணியையும் உள்ளடக்கித் தான் இந்தக் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

மக்களின் எதிர்ப்புச் சக்திகள் இப்படி திசை திருப்பப்படாமல் தொடர்ந்தும் அரசியல்வாதிகளின் அத்துமீறல்களுக்கு எதிராக கிளர்ச்சிகள் செய்ய நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று அபிப்பிராயங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வளவுதான் தார்மீகங்கள் பேசப்பட்டாலும் பெரும்பான்மையினரின் இளையதலைமுறைகள் அரசியலுக்காக நடத்தப்பட்ட இன வெறிகளையும், அதிகாரத்துக்காக நடத்தப்பட்ட அட்டூழியங்களையும் புரிந்து கொண்டாலும், ஒற்றை ஆட்சியில் ஒரு தேசமாக நாடு தொடர்ந்து செல்ல வேண்டும் என்ற கொள்கைப் பாட்டை மாற்றும் புரட்சிகரமான முடிவுகளை முன்னெடுக்கத் தயாராகவில்லை. அப்படிச் சிந்தித்துக் கருத்தியல் செய்பவர்களையும் கூட அந்நியப்படுத்தி நடத்த விரும்புகிறார்கள்.

(தொடரும்)



# பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா உரும்பிராயில் சிறப்பாக இடம்பெற்றது





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆடிப்பிறப்பு நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பிறப்பைத் தமிழர் பண்பாட்டின் திருநாளாக உரும்பிராயில் கொண்டாடியுள்ளது. உரும்பிராய் கிழக்கு பாரதிதாசன் சனசமூகநிலைய முன்றிலில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், கலை இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை. சரவணன் ஆகியோருடன் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கன் கலந்து கொண்டார்.

திருமதி ரேணுகா அன்ரன்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஆடிக்கூழும் கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் பரிசுப்பொருள்களும் வழங்கப்பட்டன.

தமிழர்களுக்கே உரித்தான ஒரு பண்பாட்டு அடையாளமான ஆடிப்பிறப்பும் அது சார்ந்த கொண்டாட்டங்களும் தற்போது அருகிவந்துள்ளன. இந்த நிலையில், மீளவும் அதனை வெகுசனமயப்படுத்தும் நோக்கிலேயே தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொது மக்களுடன் இணைந்து ஆடிப்பிறப்பைச் சிறப்பான முறையில் கொண்டாடியுள்ளது.

# ஆரியகுளத்தின் நடுவே தமிழன்னைக்கு 25 அடி உயரத்திற்கு குறையாத சிலை!

## நிறுவ யாழ்.மாநகர சபை திட்டம்

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற யாழ்.மாநகர சபை அமர்வில் ஆரியகுளத்தின் நடுவில் தமிழன்னையின் சிலையை நிறுவுவதற்கு உறுப்பினர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழன்னையின் சிலையை வடிவமைப்பதற்கான பொறுப்பு கலை பண்பாட்டு குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. யாராவது கொடை வள்ளல்கள் இதற்கு நிதியுதவி செய்ய முன்வந்தால் அந்த சிலையை வடிவமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் என யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறி கருத்து வெளியிடுபவர்களுக்கு எதிராக நவடிக்கை

## நீதிமன்றில் சி.ஐ.டி. அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறி சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடுபவர்கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சி.ஐ.டி. கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

## முழு நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கின்றார். அதனால் எதிர்க்கட்சி தலைவர் நாடு தொடர்பில் தீர்மானிப்பாரா அல்லது எதிர்கால தேர்தல் தொடர்பில் தீர்மானிப்பாரா என்பதை பொருத்திருந்து பார்ப்போம் என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே யேவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவின் தைரியத்தில் எழுதப்பட்டதே தற்போது இடம்பெற்றிருக்கின்றது. என்றாலும் இந்த விடயம் பெரும் சவாலுக்கு உரியதாகும். இலங்கை மக்களுக்கு இதன்மூலம் பெரிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்று நினைக்கின்றோம்.

முழு நாடாளுமன்றத்தையும் அரசாங்கமாக முன்னெடுத்துச் செல்லவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்போது எங்களுக்கு பதவிகள் அவசியமில்லை. சரியாக இதனை செய்வார்கள் என்று நினைக்கின்றோம்.

இதற்கு சஜித் பிரேமதாஸா உள்ளிட்டோரை இணைத்துக்கொண்டு பயணிக்கலாம். தற்போது அனுபவம் உள்ள தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார். அவர் ஊடாக தேவையானவற்றை செய்யலாம் என்று நம்புகின்றோம். சர்வகட்சி அரசாங்க அமைப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம். அதற்காகவே அவர் பிரதான எதிர்க்கட்சி உட்பட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுத்தார்.

அதனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போது நாடு தொடர்பில் சிந்தித்து செயற்பாடுவாரா அல்லது எதிர்காலத்தில் வரக்கூடிய தேர்தல் தொடர்பில் செயற்படுவாரா என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். அத்துடன் இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 14 உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்க ளித்துள்ளனர். அதேபோன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் 4 அல்லது 5 உறுப்பினர்கள் வாக்களித் துள்ளனர். இந்த வெற்றியை நாங்கள் ஏற்கனவே எதிர்பார்த்தோம். – எனத் தெரிவித்தார்.

## நாணய நிதியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோஜிவா தெரிவித்துள்ளார்.

தற்போது, நிவாரண திட்டம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன எனவும், அந்த கலந்துரையாடல்களின் பெறுபேறுகளின் படி, வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஆளும் கட்சிக்கு ஆதரவு இருந்தால் அவருடன் இணைந்து பணியாற்ற தமது பிரதிநிதிகள் எதிர்பார்த்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பஸ்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு புதிய திட்டம்

வீதி அனுமதிப்பத்திரம் உள்ள பஸ்களுக்கு அருகில் உள்ள டிப்போக்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், உரிமம் பெற்ற மற்றும் பொதுப் போக்குவரத்து பஸ்களுக்கு அவை இயக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்க முடிவு செய்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

எரிபொருள் விநியோக நடவடிக்கையின் ஆரம்பத்தில் பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# முதலாம் தவணை பரீட்சை நடத்தப்படாதென அறிவிப்பு!

*2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை, செப்டெம்பர் 7 ஆம் திகதி வரையில் நீடிக்கப்படவுள்ளது.*

*அத்துடன், இரண்டாம் மற்றும் 3 ஆம் தவணையை நடத்துவதற்கான கால எல்லை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.*

*முதலாம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையில், திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி முதல் அது தொடர்பான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.*

*அத்துடன், முதலாம் தவணை பரீட்சை நடத்தப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அதேநேரம், திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வாராந்தம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய 3 தினங்களில் மாத்திரம் பாடசாலைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*பாடசாலை நடத்தப்படாத புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் இணையவழியில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*

# தவறான பொருளாதார நிர்வாகத்துக்கு மாத்திரமன்றி மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்காகவும் கோட்டா பொறுப்புக்கூறவேண்டும்

## உலகத்தமிழர் பேரவை காட்டம்

இலங்கையில் பெருமளவான மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டம் அடைந்திருக்கும் மாபெரும் அரசியல் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் உலகத்தமிழர் பேரவை, மிகுந்த தைரியத்துடன் இந்த மாற்றத்துக்குத் தலைமைதாங்கும் சாதாரண மக்களுடனான தமதுஒருமைப்பாட்டையும்வெளிப்படுத்தியிருக்கின்றது.

அதுமாத்திரமன்றி தவறான பொருளாதார நிர்வாகத்துக்காக மாத்திரமன்றி 2005 - 2009 வரையான காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் பல ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்காகவும், 1989 இல் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்காகவும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக்கூறச் செய்யப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியிருக்கின்றது.

நாட்டின் தோற்றம்பெற்ற பொருளாதாரநெருக்கடிஇத்தகையமுற்போக்கான அரசியல் குழுவொன்று கூட்டிணைவதற்கு வழிவகுத்ததுடன், அந்தக் கூட்டிணைவு அமைதியான முறையில் மிகவும் புரட்சிகரமானதொரு வெற்றியை அடைந்துகொண்டிருக்கின்றது.

இந்தத் தருணம் சுதந்திரத்தின் பின்னர் மீண்டும் இலங்கை அடைந்திருக்கும் மறுபிறப்பாகும் என்று பிரிட்டனைத் தளமாகக்கொண்டியங்கும் புலம்பெயர் தமிழர் அமைப்பான உலகத்தமிழர் பேரவைஅதன் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறியதும், அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்ததும் மிகமுக்கியமான நகர்வுகளாகும் என்றும், இத்தகைய சம்பவங்கள் நடைபெறும் என்று சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் உலகத்தமிழர் பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தவறான பொருளாதார நிர்வாகத்துக்காக மாத்திரமன்றி 2005 - 2009 வரையான காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் பல ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்காகவும், 1989 இல் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்காகவும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக்கூறச் செய்யப்படவேண்டும் என்று மேற்படி புலம்பெயர் தமிழர் அமைப்பு வலியுறுத்தியிருக்கின்றது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய பிரதிநிதிகளின் பங்களிப்புடனான இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதை முன்னிறுத்தி பொதுத்தேர்தலை நடத்துவதன்மூலம்ஸ்திரமான, ஜனநாயகத்தன்மை மிகுந்த, பொறுப்புக்கூறத்தக்க, அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கிய ஆட்சி நிறுவப்படும் வரையில் இத்தகைய மாற்றத்தை நோக்கிய போராட்டங்கள் அமைதியானதும் அரசமைப்பிற்குஏற்புடையதுமான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமாகும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் ஸ்தாபிக்கப்படக்கூடிய புதிய அரசாங்கம் மிகவும் சவாலான சில பணிகளை முன்னெடுக்க வேண்டிய நிலையிலிருக்கின்றது. குறிப்பாக கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாடுகளுடனும் சர்வதேச பொதுநிதிவழங்கல் கட்டமைப்புக்களுடனான கடினமான பேச்சுகளை மேற்கொள்வதுடன் உணவு, எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக அவசர நிதியுதவிகளைக் கோரவேண்டும்.

அதேபோன்று பொருளாதார நெருக்கடியின் விளைவாக பொதுமக்கள் ஏற்கனவே வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர்களை மேலும் பாதிக்காத வகையில் வலுவான பொருளாதார மீட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கும் உலகத்தமிழர் பேரவை, புதிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கியதாக மாத்திரம் அமையாமல், சமூகத்திலுள்ள அனைத்துத்தரப்பினரையும் உள்வாங்கும் வகையில் அமையும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார சவாலை வெற்றிகொள்ளும் சிறந்த திட்டங்கள் எம்வசம் உள்ளன

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ



நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஒன்றிணைந்துள்ளோம். பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியில் இருந்து மீள்வது சவால்மிக்கதாகக் காணப்பட்டாலும், அந்தச் சவாலை வெற்றி கொள்ளும் சிறந்த திட்டம் எம்வசம் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் டலஸ் அழகபெருமவுடன் ஒன்றிணைந்து விசேட ஊடக சந்திப்பை எதிர்க்கட்சித் தலைவர் நடத்தினார்.

இதன்போது கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சவால்மிக்க பயணத்தின் ஆரம்பத்தை வெற்றிகொண்டுள்ளோம்.

நாட்டுமக்களுக்காகவேதியாகம் செய்துள்ளேன். தனிப்பட்ட அரசியல் வெற்றி நாட்டின் வெற்றியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் அரசமைப்பு மறுசீரமைப்பு, அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக சிறந்த அரச நிர்வாகம்,அரச நிர்வாகத்தில் சிவில் மக்கள் பங்குபற்றும் அரச சபை உருவாக்கம் ஆகியவற்றை செயற்படுத்த ஒன்றிணைந்துள்ளோம்.

எமது புதிய பயணத்துக்கு பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. நாட்டைப் பாதுகாத்து, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சகல தரப்பினரதும் பிரதான எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரம் மற்றும் சமூக நெருக்கடியில் இருந்து மீள்வது சவால்மிக்கது. இருப்பினும் கட்டம் கட்டமாக சவால்களை வெற்றிகொள்ளும் தீர்வு எம்மிடம் உள்ளது. திட்டங்களை செயற்படுத்தும் சிறந்த தரப்பினர் எம்வசம் உள்ளார்கள்.

சிறந்த திட்டத்தைச் செயற்படுத்தும் சவாலை ஏற்கிறோம். ஒருசில அரசியல்வாதிகள் எமக்கு முக்கியமல்ல. முழு நாட்டு மக்களும் முக்கியம் என்பதற்காகவே ஒன்றிணைந்து சவால்மிக்க பயணத்தை நோக்கி செல்லவுள்ளோம். – என்றார்.



# இடைக்கால அரசில் அக்கறை காட்டுக!

## அநுர கோரிக்கை

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபரைப் பொருட்படுத்தாமல், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அநுரகுமார திஸாநாயக்க, பத்து பேருக்கு மிகையாகாமல் அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் பொதுமக்களின் பல எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் தேவையில்லை என்றும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச அமைச்சர்களை நியமிக்க வேண்டும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் போது அதன் பதவிக்காலம் ஆரம்பமே அறிவிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

# நாடி வைத்தியத்தை நம்பியதால் பரிதாபச் சாவு குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

குருதிப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் நாடி வைத்தியம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட பராமரிப்பால் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த சிறுவனின் குடும்பத்தினர் உரும்பிராயில் உள்ள நபரை நாடி வைத்தியத்தை நம்பி வட்டுக்கோட்டையில் தங்கியிருந்து மகனுக்கு சிகிச்சை பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

வவுனியாவைச் சேர்ந்த 15 வயது சிறுவன் வட்டுக்கோட்டையில் உள்ள வீடொன்றில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார் .

இதையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டை பொலிஸார் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதையடுத்து சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் சிறுவனுக்கு குருதிப் புற்றுநோய் இருந்ததாகக் கண்டறியப்பட்டது .

இந்த நிலையில் திடீர் இறப்பு விசாரணையில் சிறுவனுக்கு உரும்பிராயில் நாடி வைத்தியம் செய்யப்பட்டதாக பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது .

குருதிப் புற்றுநோய்க்கு சிறப்பு மருத்துவம் உள்ள நிலையில் நாடி வைத்தியம் சிறந்தது என்று சிறுவனின் பெற்றோரால் நம்பப்பட்ட நிலையில் இந்த பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது .

சம்பவம் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்கவும் எனது நண்பர் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் டலஸ்!



அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பாக மக்களுக்கு இல்லாது போயுள்ள நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட அவர், வாக்கெடுப்பு முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அவையில் உரையாற்றும் போதே இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் இந்த ஜனாதிபதி பதவி என்பது ஓர் ஆபரணமாகவும் கௌரவமாகவும் சொத்தாகவும் கருதி நாங்கள் ஓர் அணியாக இந்த ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக கட்சி, நபர் என்ற நிகழ்ச்சிநிரலை மையப்படுத்தி, அவருக்கு முன்னுரிமை வழங்கி, அரசமைப்பிலும் அரசமைப்புத் திருத்தங்களையும் செய்து, மக்களின் இறையாண்மையைக் காட்டிக்கொடுத்து, சுதந்திரம் பெற்ற நாள் முதல் நாம் அனுபவித்த வஞ்சனையான அரசியல் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை முன்நிறுத்தியே போட்டியிட்டோம்.

வாக்குகளில், இலக்கங்களில் அடைந்த தோல்வியை நான் தோல்வியாகக் கருதவில்லை.தெரியமான வழிகாட்டலாகக் கருதுகிறேன். எமக்கு உதவிய, வாழ்த்திய அனைவருக்கும் நன்றி.

அதேபோல் வரலாற்றில் முதலாவது இணைக்கப்பாட்டு அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக இருந்தது. செயற்பாட்டு ரீதியான இணைக்கப்பாட்டு அரசாங்கத்தை அமைப்பது நோக்கமாக இருந்தது.

அதுதான் எமது அபிப்பிராயமாக இருந்தது. இதனால், தோல்வியடைந்தாலும் அந்த இணைக்கப்பாட்டை மதிக்கும் பெரும்பாலான மக்களின் எதிர்ப்பார்ப்பு மீறப்பட்டதாக நாங்கள் நம்ப மாட்டோம்.

அதேபோல் பிராந்தியத்தின் மிகப் பழைய ஜனநாயக நாடு என்ற வகையில் முடிவு எதுவாக இருந்தாலும் இந்த இணைக்கப்பாடு முழு உலகத்துக்கும் பெறுமதியான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளது.

இதற்கு வழியை ஏற்படுத்தப் பலர் அர்ப்பணிப்புகளை செய்தனர். குறிப்பாக எச்சரிக்கைக்கு பதிலாக முன்னுதாரணம் நாட்டுக்குக் காண்பித்து, தனிப்பட்ட அபிலாஷைகளை ஒதுக்கி வைத்து விட்டு, என்னை ஜனாதிபதிப் பதவிக்குப் பரிந்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதனை ஆமோதித்த வலுச்சேர்த்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ.எல். பீரிஸ் உட்பட பல கட்சிகள், இந்த நாடாளுமன்றத்தில் கட்சிகள் என்று எடுத்துக்கொண்டால், பெரும்பான்மையான கட்சிகள் அர்ப்பணிப்புகளைச் செய்தன.

இதுவரை நாட்டில் பிளவுபட்டிருந்த, பிளவுபடுத்த முயற்சித்த, இன, மத மற்றும் கட்சிகள் எந்த பிளவுகளும் இன்றி ஒன்றிணைந்து செயற்பட்டோம்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை இந்த நோக்கத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட நாடாளுமன்றத்தில் உள்ள அனைவருக்கும் எனது தனிப்பட்ட கௌரவத்தையும் நாட்டில் வாழும் பல மில்லியன் மக்களின் கௌரவத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியமை போல் சுதந்திரத்துக்குப் பின்னர் எமது தாய் நாடு மிக மோசமான காலகட்டத்தைக் கடந்து வருகிறது.

முன்னேறிய ஜனநாயகத்தை நாடாளுமன்றத்தில் வெளிக்காட்டி ரணில் விக்கிரமசிங்கவும் எனது நண்பர் அநுர குமார திஸாநாயக்கவும் போட்டியிட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் புதிய ஜனாதிபதிக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் எமது கொள்கைகளுக்கு போலவே எந்த அரசியல் கொள்கைக்காகவும் வாக்குகளை வழங்கிய அனைவருக்கும் எனது சகோதரத்துவத்தின் கரங்களை நீட்ட எதிர்பார்க்கின்றேன்.

ஆரோக்கியமாக உள்ள நாட்டுக்கு மீண்டும் எழ முடியும். நோய்வாய்ப்பட்ட நாட்டுக்கு மீண்டும் எழ முடியாது. இதற்கு எமது அனைவரது ஒத்துழைப்பும் அவசியம். நாம் எப்போது இந்த தியவன்னா தீவில் இருக்கும் 225 குடும்பங்களை மாத்திரம் பற்றியே சிந்தித்தோம்.

நாங்கள் தியவன்னாவுக்கு வெளியில் இருக்கும் 58 லட்சம் குடும்பங்கள் பற்றி சிந்தித்தோம். இதனால், ஒன்றாக ஒன்றிணைய வேண்டும். இந்திய பெருங்கடலின் மத்தியில் இருக்கும் இந்த தீவில் வாழும் 22 மில்லியன் மக்களும் எம்முடன் ஒன்றிணைவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை அற்று போயுள்ள சந்தர்ப்பத்தில், நாம் அரசியல் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இல்லாமல் போயுள்ள நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அது இலக்கங்களில் செய்யக்கூடிய வேலையல்ல. அதற்கு சிறந்த அரசியல் பயிற்சியில் செய்ய வேண்டியது அவசியம் எனவும் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

# ரணிலுக்கு வாக்களித்துவிட்டு ஊருக்கு வர வேண்டாம் அச்சுறுத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அழுத்தம் கொடுத்த 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் சமூக வலைத்தளம் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து அச்சுறுத்தியுள்ளனர் என குற்றவியல் விசாரணை திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களின் தகவல்கள் முகநூல் நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளன.

'ரணிலுக்கு வாக்களித்து விட்டு ஊருக்கு வர வேண்டாம்' என இந்த நபர்கள் சமூக ஊடகங்களில் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பதிவு இட்டிருந்தனர் என குற்றவியல் விசாரணை திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

இந்த நபர்களில் காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள லஹிரு வீரசேகர, ரத்கரவ்வே ஜினரதன தேரர், அனுருத்த பண்டார உட்பட நான்கு பேர் இருக்கின்றனர் எனக் குற்றவியல் விசாரணை திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

# புதிய ஜனாதிபதிக்கு நாமல் வாழ்த்து!



இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதிக்கு வாழ்த்துகள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது.

ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில் அதிகளவான வாக்குகள் பெற்றதையடுத்து ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் நாமல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும், நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்யும் பொறுப்பு உங்களிடம் உள்ளது.

எங்கள் தேசத்தை முன்னெடுத்துச் செல்ல மும்மூர்த்திகள் உங்களை ஆசீர்வதித்து வழிகாட்டட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# வித்தியாசமான முறையில் கியு.ஆர்.கோர்ட் விற்பனை




**யாழில் விசித்திரம்**

எரிபொருளுக்கான தேசிய பாஸ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் பாஸ் முறை திட்டத்தின் கீழ் பதிவு செய்துகியு.ஆர்.கோட்டைபெற்றுவருகின்றனர்.

அவ்வாறு பெற்றுக்கொண்ட பாஸின் கியு. ஆர். கோட்டை அடையாள அட்டை போன்றும், கீ டேக் போன்றும் தயாரித்து கட்டணம் அறவிட்டு விற்பனை செய்து வருகின்றனர்.

யாழில் ஒருவர் கியு.ஆர். கோட்டினை வாகன திறப்புக்களில் மாட்டி விட கூடியவாறாக கீ டேக் வடிவில் செய்து கொடுப்பதுடன், அதற்காக 600 ரூபாவை அறவீடு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதே போன்று மற்றுமொருவர் அடையாள அட்டை போன்று கியு.ஆர். கோட்டினை வடிவமைத்து அதற்காக அவர் 300 ரூபாவை அறவீடு செய்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## டலஸைக் களமிறக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ன நடக்குமென்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என தெரிவித்த அவர், எந்த அரசாங்கம் வந்தாலும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றார்.

இது மக்கள் ஆணை இல்லை என பலரும் கூறினாலும் எம்மைப் பொறுத்தவரை இதுதான் மக்கள் ஆணை என்றார்.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டங்கள் போதுமென்று தான் நினைக்கின்றமையால் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்போது இதனைப் புரிந்துகொண்டு அங்கிருந்து வெளியேறி தங்கள் தொழில்களை செய்யலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இனிமேல் பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை, செப்டெம்பர் 7ஆம் திகதி வரையில் நீடிக்கப்படவுள்ளது.

அத்துடன், இரண்டாம் மற்றும் 3 ஆம் தவணையை நடத்துவதற்கான கால எல்லை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதலாம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையில், திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி முதல் அது தொடர்பான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், முதலாம் தவணை பரீட்சை நடத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஜனாதிபதியாக ரணில் தெரிவு ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

## அசாத் சாலி பெருமிதம்



நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றம் தெரிவு செய்துள்ளமையானது ஜனநாயகத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியென தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வாழ்த்தி, அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது –

முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல பாதைகளைக் கடந்து வந்தவர். அரசியலில் எத்தனை சவால்களை எதிர்கொள்ள நேர்ந்த போதும், ஒருநாளும் அவர் ஜனநாயகத்தை விட்டுக்கொடுத்தவரல்லர்.

முக்கியமான காலகட்டத்தில் பல தியாகங்கள் செய்து நாட்டையும், மக்களையும் பாதுகாத்த பெருமை அவருக்குண்டு மட்டுமல்ல, நெருக்கடியான நேரங்களில் கூட துணிந்து நின்று பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட அவரது முன்னுதாரணம், அரசியல் முதிர்ச்சியையே காட்டுகிறது.

வாதத்திறமையும், வாக்குறுதி மீறாத நேர்மையும் தான் அவரை இந்தளவு உயர்த்தியிருக்கிறது.

சர்வதேசத்தில் அவருக்குள்ள செல்வாக்கினால் நமது நாட்டு நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான வியூகங்களை வகுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, நாடாளுமன்றத்துக்கும் உள்ளது. இந்த நம்பிக்கை தான் அவரை இன்றைய வாக்கெடுப்பில் வெற்றியீட்ட வைத்துள்ளது.

வென்ற கையோடு சகல கட்சிகளையும் ஒத்துழைக்குமாறு புதிய ஜனாதிபதி அழைத்திருப்பது ஜனநாயக வாதிக்குள்ள பண்பையே எடுத்துக்காட்டுகிறது.

எனவே, இனியாவது அரசியல் பேதங்களை மறந்து, நமது நாட்டு நெருக்கடியைத் தீர்க்க சகலரும் புதிய ஜனாதிபதியுடன் கைகோர்க்க வேண்டும். – என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை மேம்படுத்தும் ஒப்பந்தத்தில் யாழ்.பல்கலைக்கழகம் கைச்சாத்து



ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை மேம்படுத்தும் நோக்கிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையமும் யாழ்.பல்கலைக்கழகமும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக்கான மையத்தின் சார்பில் வைத்திய கலாநிதி எம்.ஏ.வை.அரபாத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி.ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் சுயாதீன ஊடக மற்றும் தகவல் விளங்கறிவு ஆலோசகர் கலாநிதி எம்.சி. ரஸ்மின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விழிப்புணர்வுடனான தகவல் நுகர்வின் அடிப்படையில் செம்மையான தகவல் பரிமாற்றத்துக்கு பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களைத் தயார்படுத்தும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதனுடன், இலங்கையில் தற்போது காணப்படும் ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக் கல்வியில் வெளித்தெரியும் இடைவெளிகளையும், குறைபாடுகளையும் ஆய்வு செய்யவும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் பேறாக, இலங்கைக்குப் பொருத்தமான ஊடக மற்றும் தகவல் விளங்கறிவுக் கல்வி பற்றிய முன்மொழிவுகளும் வெளியிடப்படவுள்ளன.



# கஞ்சாவுடன் இரண்டு பேர் யாழ்.காரைநகரில் கைது!

யாழ்.காரைநகர் கடற்பரப்பில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

575 கிலோ கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேரள கஞ்சா கடல் வழியாக இலங்கைக்கு கடத்தப்படுவதாக இலங்கை கடற்படைக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, காங்கேசன்துறை கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது 575 கிலோ கிராம் கஞ்சாவும் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடற்படையினர் கைது செய்யப்பட்ட நபர்களையும், கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் படகு என்பவற்றையும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மேலும், கைப்பற்றப்பட்ட படகு மற்றும் கஞ்சா என்பனவற்றை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பஸில் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் ஜனாதிபதி மாளிகையிலேயே பதுங்கல்

## வெளியான அதிர்ச்சித் தகவல்

கடந்த ஜுலை 09 ஆம் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்ட போது முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் ஜனாதிபதி மாளிகையின் அறையொன்றில் இருந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைவதை தடுப்பதற்காக இராணுவத்தினர் பயன்படுத்திய பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் வந்த போது வெளிவிவகார அமைச்சு பக்கத்தில் அமைந்திருந்த வாயிலாக பஸில் ராஜபக்ஷ வெளியேறினார் எனத் தெரிய வந்துள்ளது.

அதற்கு அரை மணி நேரத்துக்கு முன்புதான் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டுள்ளனர்.

பாதுகாப்பு செயலாளரும் முப்படை தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் ஜனாதிபதி மாளிகையின் செயற்பாட்டு அறையில் இறுதி தருணம் வரை பாதுகாப்பு படையினரை வழிநடத்தியிருந்தனர் எனக்கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மாளிகையின் இரண்டாவது மாடியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பாக கடற்படைத் தலைமையகத்துக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கிருந்து கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதன்னவின் தலைமையில் ரணபாகு கப்பலின் மூலம் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரியவந்துள்ளது.

# மதகுருமார்களுக்கு எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு செய்க!

## மாவட்ட செயலர்களிடம் ஆறு.திருமுருகன் கோரிக்கை



மதகுருமார்கள் எரிபொருள்களைப் பெறுவதற்காகப் பலமணிநேரம் வீதியில் காத்துக்கிடப்பது வேதனையளிக்கின்றது. அவர்களுக்கு எரிபொருள்களைப் பெற விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்துமாமன்றத்தின் உப தலைவரும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவருமாகிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வடக்கு – கிழக்கு மாவட்ட செயலர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மதகுருமார்கள் வரிசையில் காத்திருந்து தமது வாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர்.

பல ஆலயங்களில் நேரம் தவறாமல் பூசையாற்றிவரும் பூசகர்கள் தெரிவில் காத்திருப்பது வருத்தத்துக்குரியது.

எனவே, சகல மதகுருமார்களுக்கும் வாரத்தில் ஒரு நாள் மாலை நேரம் எரிபொருள் வழங்க அரச அதிபர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உத்தரவிடவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். மதகுருமார்களை மதித்து நடப்பது எமது சமூகத்தின் கடமையாகும் – என்றார்.